முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : **1166**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.12.2022**, வியாழக்கிழமை

1. தர்மராஜனே அரங்கா வாழ்க
   தரணிகாத்திடும் தேசிகா வாழ்க
   பெருமைமிக்க தொண்டர் படைகொண்ட
   பிரணவக்குடில் படைத்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   **(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 22 ம் நாள் 08.12.2022, வியாழக்கிழமை)**
   ஊழ்போக்கும் மகா சக்தி கொண்ட கலியுகத்தின்
   உயர்ஞானி அரங்கன் நீயப்பா
3. அப்பனே உன் ஆற்றல் இந்த உலகை மாற்றும்
   அரங்கனே உன் தர்மம் இந்த உலகை காக்கும்
   காப்பாக நீதருகின்ற வேதமும் ஞானமும்
   கலியுகத்தார்க்கு அழியாமை என்கின்ற மகா சக்தியை தரும்
4. தருகவே நித்தம் நித்தம் உன்னுள்
   தவபலமாய் மகா சக்திகளை ஆறுமுகன் யான்
   பெருமைபட சூட்சுமமாய் வழங்கி அருளிவர
   பிரணவக்குடில் தொடர்பு கொண்ட உலகோர்க்கு
5. சரவண ஜோதி மூலமாக சர்வ சித்தியும்
   சற்குரு உன் தயவாக வந்து கிட்ட நேரும்
   அற்புதம் பெற உலகோர் அவசியம் உன்வழி ஆன்மீக ஞானம் ஏற்று வருதல் வேணும்
   அரங்கன் திருவடி பற்றி தீட்சை பெறுதலும் வேணும்
6. வேண்டியே தர்மத்தை விடாது உலகோர் கடைபிடித்து
   வினவிட உலகமெங்கும் சன்மார்க்கம்
   குறைவின்றி ஜீவதயவோடு தழைக்க
   குவலயத்தார் அரங்கன் திருவடி பற்ற வேண்டும்
7. பற்றிவர பற்றிவர பாருலகத்தின் இடர்களெல்லாம் அகன்றோடி
   உற்றதொரு ஞானச்சித்தர் காலம் உயர்வான
   ஞானிகள் ஆட்சியாகவும் மலரும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–